# பொதுசன உதவித் திணைக்களம்

# கொழும்பு மாநகரசபைக்கு தொழிற்பயிற்சி ஆலோசகர் (வெளிவாரி) பதவிக்கான விண்ணப்பங்களைக் கோரல் – 2027

01. **பதவி** : தொழிற்பயிற்சி ஆலோசகர் (வெளிவாரி) பதவி

கீழ்வரும் பாடநெறிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பவியலாளர் பாடநெறி (NVQ 4) 01
2. முன்பள்ளி ஆசிரியர் பயிற்சிப் பாடநெறி (NVQ 4) 01
3. பேக்கரி மற்றும் பேஸ்ட்ரி பாடநெறி (NVQ 4) 01
4. தையல் பாடநெறி (NVQ 3) 06
5. கைவினைக்கலைப் பாடநெறி 01
6. குளிரூட்டி மற்றும் குளிர்சாதனப் பெட்டி பாடநெறி 01
7. வெல்டிங் வேலைகள் பாடநெறி 01
8. மின்சாரக் கைத்தொழில் பாடநெறி
9. முதியோர் பராமரிப்புப் பாடநெறி 01

02. **கொடுப்பனவு** : நாளொன்றுக்கு ரூ.3,800/- க்கான கொடுப்பனவு வழங்கப்படும் (நாளொன்றுக்கு 7 மணித்தியாலங்கள்)

03. **உடற்கூற்றுத் தகைமைகள்** :

i. பதவியில் கடமைகளை நிறைவேற்றுவதற்கு உடல் மற்றும் உள ஆரோக்கியத்துடன் காணப்படுதல்.
ii. சிறந்த ஆளுமையைக் கொண்டிருத்தல்.
iii. கற்பிக்கும் ஆற்றல் காணப்படுதல்

04. **வயது** : விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் திகதியன்று வயது 21க்கும் 65க்கும் இடைப்பட்டிருத்தல் வேண்டும்.

05. **கல்வித் தகைமை** : மொழி (சிங்களம்/தமிழ்/ஆங்கிலம்), கணிதம் மற்றும் ஏனைய இரண்டு பாடங்களில் திறமைச் சித்திகளுடன் ஒரே தடவையில் ஆறு (06) பாடங்களில் கல்வி பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தரப்) பரீட்சையில் சித்தியடைந்திருத்தல்.

மற்றும்

கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தரப்) பரீட்சையில் குறைந்தபட்சம் மூன்று (03) பாடங்களில் சாதாரண சித்திகளுடன் (பொது அறிவுப் பரீட்சை தவிர) சித்தியடைந்திருத்தல்.

06. **தொழில்சார் தகைமைகள்** : i) அரசால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றிலிருந்து ஒவ்வொரு பாடநெறிக்கும் ஏற்புடையதான NVQ Level 4 அல்லது 5 அல்லது அதற்குச் சமனான அல்லது அதற்கு மேற்பட்ட மட்டத்திலான டிப்ளோமா சான்றிதழ் அல்லது தகைமைகளையாவது கொண்டிருத்தல். ii) குறித்த கால எல்லைக்குள் பாடநெறியுடன் தொடர்புடைய விடயத்தை உள்வாங்க முடிதல்.

07. **அனுபவம்** : 02 வருடங்களுக்குக் குறையாத சேவை அனுபவத்தைப் பெற்றிருத்தல்.

08. **வேறு தகைமைகள்** : i) இலங்கை பிரஜையாக இருத்தல் வேண்டும் ii) நன்னடத்தையுடையவராக இருத்தல் வேண்டும். iii) விண்ணப்பங்களைக் கோரும் அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள திகதியில் இத் தகைமைகள் அனைத்தும் எல்லா வகையிலும் பூர்த்தி செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.

09. **தேர்ந்தெடுக்கப்படும் முறை** நேர்முகப் பரீட்சை மூலம் தேர்ந்தெடுக்கப்படுவதுடன் விடயத்துடன் தொடர்புடைய சிறு சமர்ப்பணமொன்றையும் முன்வைக்க வேண்டும்.

10. **ஒப்பந்தம் செய்தல்** : பாடநெறிக் கால எல்லைகள் மாறுபடுவதுடன் ஒவ்வொரு கால எல்லைக்கும் ஏற்புடையதாக கொழும்பு மாநகரசபையுடன் ஒப்பந்தம் செய்யப்பட வேண்டும்.

- இத்துடன் இணைக்கப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப் பத்திரத்திற்கு ஏற்ப, தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்களைப் பூர்த்தி செய்து சமர்ப்பிக்க வேண்டியதுடன், விண்ணப்பத்தை இடும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "தொழிற் பயிற்சி ஆலோசகர் (வெளிவாரி)" எனக் குறிப்பிட்டு ..........................திகதிக்கு முன்னர், மாநகர ஆணையாளர், கொழும்பு மாநகரசபை, நகரமண்டபம், கொழும்பு 07 என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பி வைக்கப்பட வேண்டும்.
- சேவையில் ஈடுபடுத்துவது தொடர்பிலான இறுதித் தீர்மானம் மாநகர ஆணையாளரின் வசமானது.

2026.10.08 ஆம் திகதி

**ஏ.டி. எஸ்.ரோஹண**
**மாநகர ஆணையாளர்**

**கொழும்பு மாநகரசபை**
**நகர மண்டபம்**
**கொழும்பு 07.**